20 காசு

காஞ்சி

8-5-69

நிறுவனர்: அண்ணாதுரை



?! வினா-விடை

1. அரசாங்க டாக்டர்கள் தனியாகத் தொழில் நடத்துவதால் என்ன தீமை ஏற்பட்டுவிடும்?

எல்லா தீமைகளும்தான் ஏற்படும்! அரசு மருத்துவ மனைக்கு வரும் நோயாளிகள், அந்தந்த டாக்டரிடமே தனியாகச்சிகிச்சை எடுத்துக் கொண்டால்தான் நோய் குணமாகும். இவை பெரிய தீமையாகத் தெரியவில்லையா?

2. கட்சிகளுக்கு நன்கொடை தருவதைத் தடுக்க சட்டம் வந்தால் அது காங்கிரஸைத்தானே பாதிக்கும்?

தெரியாதா காங்கிரசுக்கு இது, தெரிந்துதானே சட்டம் கொண்டு வருகிறார்கள்! கொஞ்ச காலம் பொறுத்திருங்கள். இந்த நன்கொடைகள் காங்கிரசுக்கு எந்த வடிவத்தில் வருகிறது என்பதைப் பார்ப்போம்!

3. கடைசியில் கேரள அமைச்சர் குஞ்சு பதவி விலகிவிட்டாரே?

வெயிட் பிளீஸ். இன்னும் யார் யார் விலகுகிறார்கள் என்று காத்திருக்கப் பொறுமையில்லையா உங்களுக்கு!

4. சோஷலிஸ்டுத் தலைவர் லோகியா மறைந்த ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு அவர் தேர்தல் செல்லாது என்று அறிவிப்பு வருவது எப்படி இருக்கிறது?

சில பேர் அரசாங்கத்திடம் ஏதற்காவது மனுச் செய்துவிட்டு பதிலுக்காகக் காத்திருந்து காலமாகி விட்ட பின்பு, காலமான அவரை பதில் தேடி வருவதைப் போல இருக்கிறதா?

5. படேலுக்கு மத்திய அமைச்சர் பதவி கிடைக்குமா?

ஏற்கெனவே அமைச்சராக இருந்தவர்தான்! என்றாலும் அவரை இப்போது அமைச்சராக்கிக்கொள்வதன் மூலம் புதிய பல பிரச்னைகளையும் ஏற்படுத்திக் கொள்வதாக ஆகும் என்று காங்கிரஸ் தலைமை கருதுவதாகத் தெரிகிறது.

6. மலேசிய அரசு பிழைக்குமா?

கலவரங்களால் எந்த அரசையும் கவிழ்த்துவிட முடியுமானால் பாகிஸ்தான்கூட கவிழ்ந்துபோயிருக்கவேண்டுமே!

7. வி. வி. கிரி, தனக்குத்தான் குடியரசுத் தலைவர் பதவி தரப்பட வேண்டும்என்று கேட்பது சரியா?

சரியா? தவறா? என்பதற்கு இதில் என்ன இருக்கிறது? கிரி கேட்பதிலும் நியாயம் இருக்கிறது —வாதமும் சரியானதுதான்!

With the best compliments from:

Shantidev Genearl Supply Syndicate,

MADRAS-7.

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 5 | 18—5—69 | இதழ் 44

தொண்டர்கள் வாழ்க!

அண்மையில் தமிழகத்தில் நடைபெற்ற நகராட்சித் தேர்தலையொட்டி, 72 நகரமன்றங்களுக்கு நடைபெற்று முடிந்த தலைவர் தேர்தலில் 44 நகரங்களுக்குக் கழகத் தலைவரும் 3 நகரமன்றங்களுக்குக் கழக ஆதரவுபெற்ற சுயேச்சையாளர் தலைவராகவும், 19 நகரங்களுக்குக் காங்கிரசுக்கட்சியின் சார்பிலும், இரண்டு நகரங்களுக்கு தோழமைக்கட்சியான முஸ்லிம்லீக் தலைவரும் மூன்று நகரங்களில் சுயேச்சையாளர் தலைவராகவும், ஒரே யொரு நகரத்தில் சுதந்திராக் கட்சித்தலைவரும் மன்றத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

தேர்தல் நடந்து முடிந்தவுடனேயே 57 நகராட்சிகளைக் கைப்பற்றமுடியும் என்று போடப்பட்ட கணக்கில் காங்கிரசுக் கட்சி தனக்கேயுரிய சகல தந்திரோபாயங்களையும் முடுக்கி, தாராளமான அளவுக்குப் பணப் பேழையைத் திறந்துவிட்டு எட்டே நகரங்கள் பெரும்பான்மைபெற்றிருந்த நிலையில் பத்தொன்பது நகரங்களைத் தன் கீழ்க்கொண்டு வந்திருக்கிறது. இந்தப் பத்தொன்பதிலும், சீட்டுக் குலுக்கிப் போட்டதில் அடித்தகாற்று இரண்டு நகரங்களில் வாய்ப்பினைத் தந்திருக்கிறது.

57 நகரங்கள் இல்லாவிட்டாலும் 50 நகரங்கள் வரையிலும் கழகத்திற்குக் கிடைத்திருக்கிறது, கடந்த முறை ஏழு நகரமன்றங்களே இருந்த நிலையில் இப்போது 50 கிடைத் திருப்பதானது சாதாரண வெற்றியென்று யாராலும் மதிப்பிடமுடியாது,

பேரறிஞர் அண்ணா வகுத்தளித்த திட்டங்கள், ஆற்றிய அறிவுரைகள், காட்டிய பாதைகள் அனைத்தும் செம்மையாகச் செயல் படுத்தப்பட்டு நல்லமுறையில் அறுவடையைத் தேடித் தந்திருக்கிறது என்றுதான் கருதவேண்டும்.

50க்கும் மேற்பட்ட நகரமன்றங்களைக்கொண்டிருந்த கட்சி, இப்போது எப்படியோ என்றாலும் 19 இடங்களை மட்டும் கைப்பற்றி இருக்கும்போதே, அக்கட்சியின் தலைவர், காங்கிரசுக்கு மக்கள் ஆதரவு பெருகியுள்ளது கண்டு மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்திருக்கிறார்.

1942-43ல் இரண்டாவது உலகப் பெரும் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் ஹிட்லரின் நாஜிக் கட்சி, பிரிட்டிஷ் போர்த் தளங்களையெல்லாம் தவிடுபொடியாக்கிவிட்டு முன்னேறிக்கொண்டேயிருந்த நேரத்தில், பிரிட்டிஷ் தன் காலனி நாடுகளிலெல்லாம் வெற்றி! வெற்றி!! என்றே குதூகலித்துக் கோலாகலமாக விழாக்களும் நடத்திக் களித்துக்கொண்டிருந்தது.

அதைப் போலவே காங்கிரசுக் கட்சியும் தேர்தலிலே மூக்குடைபடுகின்ற போதெல்லாம், மக்கள் காங்கிரசின் பக்கம் திரும்பிவிட்டார்கள்! வந்துகொண்டிருக்கிறார்கள்! வரப் பார்க்கிறார்கள் என்றெல்லாம் பேசிப் பேசிப் பார்த்துக் களித்துக் கொண்டிருக்கிறது.

மனத்தளவுக்கு அந்த அற்ப மகிழ்ச்சியையாவது அது, அடைவதற்குக் குறுக்கே நாம் நிற்கவில்லை— மகிழக்கூடாது என்றும் நாம் கூறவில்லை. காங்கிரசின் மகிழ்ச்சி உள்ளபடியே மனப்பூர்வமானதாகவே இருக்க வேண்டும் என்றே கருதுகிறோம்!

காங்கிரஸ் கட்சி இன்று இந்த போலித்தனமான மகிழ்ச்சியடையும் நிலைமைக்கு வந்ததன் மூல காரணமே, அது அடிநாள் தொட்டு, அதன் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் ஊன்றுகோலா யிருந்தவர்களை யெல்லாம் புறக்கணித்து ஒதுக்கிவிட்டு, கதர்ச் சட்டை மாட்டிக் கொண்டவர்கள் எல்லாருமே காங்கிரசுக்காரர்கள் தான்! என்ற முறையில் செயல்படத் தொடங்கியது தான் என்பதனை மறைந்த மேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் பன்முறை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

தன் கட்சி ஊழியர்களையும், தொண்டர்களையும் அவர் தம் தியாகங்களையும் மறைத்துவிட்டு மறந்துவிட்ட அந்த நிலைமையே காங்கிரசுக்கட்சிக்கு அழிவினைத் தேடித் தந்ததைப்போல் பேரறிஞர் அவர்கள் தம் கட்சித் தொண்டர்களையும் ஊழியர்களையும், தியாகச் செம்மல்களையும் எந்த நேரத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் ஒட்டி உறவாடுகின்ற தொடர்போடு இருந்த நிலைமைதான் இப்போது கழகத்திற்குப் பெரும்பான்மையான வெற்றியை ஈட்டித் தந்திருக்கிறது.

கழகத்தின் சில அதிகாரபூர்வமான வேட்பாளர்களை, கழகத்தவரே சில இடங்களில் எதிர்த்துப் போட்டியிட்டும், அதன் மூலம் வெற்றி வாய்ப்பினைத் தடுத்தும்விட்டிருக்கிறார்கள் என்பதிலிருந்து பெற வேண்டிய பாடம் இரு கட்சிக்குமே பொருந்துவதாகும்.

எனினும் கழகம், தன் ஜனநாயகக் கடமைகளைச் சீராக, செம்மையாக நிறைவேற்றவில்லை என்று எவராலும் கூறிவிட முடியாது. தொண்டர்களையும் ஊழியர்களையும் மதித்துச் செயல்படுவதில் கழகத்துக்கு ஈடாக இன்னொரு கட்சியை எடுத்துக்காட்டுக்குத் தரவும் முடியாது.

தொண்டும், சேவையும் மதிக்கப்பட்டதன் எதிரொலிதான் இவ்வளவு பெரிய வெற்றியைக் கழகத்துக்குத் தந்திருக்கிறது. மக்கள் சக்தியைத் திரட்டுவதிலே தளராத ஊக்கமும், ஆர்வமும் காட்டியிருக்கிறார்கள் அவர்கள். இத்தகு பெருமைக்குரிய நிலைமையினை மனமகிழ்வோடு ஊழியர்களுக்களித்த வாக்காளர் பெருமக்கள் எல்லா வகையாலும் பாராட்டத்தக்கவர்கள் ஆவர். நன்றிக்குரியவர்கள் ஆவர்.

இத்தகைய எல்லா பெருமைகளும் பேரறிஞர் அண்ணா அவர்களைச் சாரும்போது, அண்ணா அவர்களின் அடியொற்றிச் சென்றொழுகும் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கும் சார்ந்துவிடுகிறது.

ஆனால் காங்கிரசின் அழிவும், தேய்வும், சோகக் குரலும் இதற்கான எல்லாப் பெருமைகளும் யாரைச் சார்கிறது என்றுதான் கண்டறிந்து கூறமுடியவில்லை.

ஒரு அரசியல் இயக்கத்தின் வாழ்வும் தாழ்வும் அதன் தொண்டர்களிடத்திலே அடைக்கலமாகி இருக்கிறது என்று எண்ணிப் பார்க்கும்போது 'என்னே தொண்டர் தம் பெருமை' என்றே மனம் மகிழ்வெய்துகிறது! வாழ்க தொண்டர்கள்! வாழ்க தி. மு. கழகம்!!

தம்பி

‘மிருக ஆட்சி’

போஸ்டர் வேண்டுமா, போஸ்டர்! கண்ணைக் கவரும், கருத்தைக் கிளறும்! காங்கிரஸ் ஒழிப்பிலே கவலைகொண்ட பெரியோர்களே! இளைஞர்களே! போஸ்டர் தயாரித்திருக்கிறோம், காங்கிரசுக்கு ஓட்டுப் போடாதீர்கள் என்று அழகாக அச்சடிக்கப்பட்ட போஸ்டர் — இலட்சக்கணக்கிலே உள்ளன — அடக்க விலை — ஆதாயம் கருதிப் போடப் பட்டதல்ல— வியாபார நோக்கத்துடன் வெளியிடப்பட்டதல்ல —நாட்டைக் கேடர்களிடமிருந்துமீட்டிட நல்லறிவுப் பிரசாரம் நடாத்துவதற்காகவே, பொருள் நட்டம், நேரக்கேடு, எதையும் பொருட்படுத்தாது இதை வெளியிடுகின்றோம். ஆயிரக் கணக்கிலே வாங்குங்கள் — விலை மலிவு — பல்லாயிரக்கணக்கிலே வாங்குங்கள்—பட்டிதொட்டிகளிலுள்ளோரும் வாங்குங்கள்—வீடுதோறும் ஒட்டிவையுங்கள்—ஓட்டு கேட்க வரும் காங்கிரசாரை ஒட்டுங்கள்.

காங்கிரசார் கண்களிலே, எந்தப்பக்கம் திரும்பினாலும் இந்தப் போஸ்டர்கள் பட வேண்டும்—நாடே நமக்கு விரோதமாக இருக்கிறது — ஊரார் அனைவரும் ஒன்று கூடிவிட்டார்கள் நம்மை விரட்ட என்று கிலிகொண்டு அவர்கள் பிடரியில் கால்பட எடுக்க வேண்டும் ஓட்டம்—அதற்கு உதவக்கூடிய போஸ்டர். வாங்குங்கள் ஒட்டுங்கள்!

ஆயிரம் ஐந்தே ரூபாய்! கருப்பு மையில் அச்சிடப்பட்டது, கண்கவரும் வனப்புள்ளது.

நாலரை அல்லது ஐந்து அங்குல அகலம் இருக்கும்—பதினெட்டு அங்குல ;நீளம்!

புரட்சிகரமான தோற்றம் தேடுவோர். சிகப்பு மையில் அச்சிடப்பட்ட போஸ்டர்களை வாங்கலாம்—விலை சிறிதளவுதான் கூடுதல்—ஆயிரம் 7 ரூபாய்தான்!

காங்கிரசுக்கு ஓட்டுப் போடாதீர்கள்—என்ற இந்த அறிவுரைத் தாட்களை அனைவரும் ஆயிரக் கணக்கிலே வாங்கி, ஊரெங்கும் ஒட்டி திராவிட நாட்டுக்கு ஆபத்து வராதிருக்க நம்மாலான நல்ல தொண்டு செய்தோம் என்ற மனத்திருப்தியும் மகிழ்ச்சியும் பெறுங்கள். இந்தச் சிறு காரியத்தைக்கூடச் செய்யத் தவறுபவர்களை நாம் எப்படித் திராவிட மக்கள். என்று ஏற்றுக்கொள்ள முடியும்?

இழி ஜாதி மக்கள், ஈனப்பிறவிகள், காலித்தனத்தால் கூலித்தனத்தால் வயிறு கழுவும் வக்கற்ற மக்கள், என்று உலகு நாளைக்குக் கூறும். எனவே போஸ்டர் வாங்குங்கள். பொன்னான வாய்ப்பு, புனிதமான கடமை; பொறுப்பு உணர்ந்தோர் செய்து தீரவேண்டிய தொண்டு–காங்கிரசுக்கு ஓட்டுப் போடாதீர்கள்—என்ற போஸ்டர்களை வாங்கி எங்கும் ஒட்டி வைப்பதுதான்.

என்ன அண்ணா! இது! காங்கிரஸ் ஒழிப்புக்கான போஸ்டர் வெளியிடுகிறாய், விலை கொடுத்து வாங்கி ஊரெல்லாம் ஒட்டு என்றால் ஒட்டுகிறோம்—அற்காக வாங்காதவர்கள் ஈனப் பிறவிகள்—இழி ஜென்மங்கள் என்றெல்லாம் சுடுமொழி கூறுகிறாயே, இதென்ன;

என்றைக்குமில்லாத முறையில் இருக்கிறதே என்று சிறிதளவு கோபத்துடன் கேட்க எண்ணுகிறாய் அல்லவா? தம்பி! சுடுசொல் கூறுபவனா நான்—உன்னையா நான் சுடுமொழியால் தாக்குவேன்? என் மொழியும் அவ்விதம் இராது — என் வழியும் அது அல்லவே! விஷயத்தைச் சொன்ன பிறகல்லவா உனக்கு உண்மை துலங்கும், கேள்.

சென்ற பொதுத் தேர்தலின்போது, காங்கிரஸ் கட்சி எப்படியும் ஒழிக்கப்பட்டாகவேண்டும்; அதிலே ஒரு சில கண்ணியவான்கள், ஓமந்தூரார்போன்ற உத்தமர்கள் இருந்தாலும் கவலைப்படுவதற்கில்லை, அந்த 'ஸ்தாபனம்' ஒழிக்கப்பட்டாகவேண்டியது மிக மிக அவசரமான கடமை, அதிலிருந்தும் அணுவளவும் பிசகுவது கூடாது. அச்சம், தயை தாட்சணியம்—முன்பின் தொடர்பு எதுவும் குறுக்கிடக்கூடாது என்று வீராவேசமாகத் திராவிடர் கழகம் சீறிப் போரிட்ட போது, விடுதலைக் காரியாலயம், காங்கிரசை ஒழித்துக் கட்டுங்கள் — காங்கிரசுக்கு ஓட்டுப் போடாதீர்கள் என்று மக்களுக்கு அறிவு விளக்கம் தர, அவர்களை ஆண்மையாளர்களாக்க, கருப்பிலும் சிகப்பிலும், போஸ்டர்கள் பல இலட்சம் வெளியிட்டு, விற்பனை செய்தார்கள் — அதை நினைவூட்டுகிறேன் — உனக்கு மட்டுமல்ல - அவர்களுக்கோ என்று கேட்டுவிடாதே, அவர்களுக்கு நான் தரும் கரும்பும் கசக்கும்—நாட்டவருக்கும் நினைவூட்டுகிறேன்.

அன்று காங்கிரஸ், எந்த அளவுக்கு, வெறுக்கப்பட்வேண்டிய, ஒழிக்கப்படவேண்டிய, கேடான 'ஸ்தாபனமாக' இருந்ததோ, அதிலே ஏதேனும் ஒரு துளி மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா? நாமெல்லாம் வாழ்த்தி வரவேற்கத்தக்க, அல்லது சகித்துக்கொள்ளத்தக்க விதமான அமைப்பாக, காங்கிரஸ் மாறிவிட்டதா? பார்ப்போம்—இந்த ஒரு தடவை இருந்து தொலைக்கட்டும்—என்று கூறத்தக்க, மன நிலையை நாம் பெறுவதற்கான திட்டங்களை காங்கிரஸ் நாட்டுககு அளித்திருக்கிறதா? என்பனபோன்ற எண்ணங்கள் என் மனதைக் குடைகின்றன, மனமென்ற ஒன்று இருந்து தொலைப்பதால்!

சென்ற பொதுத் தேர்தலின்போது இருந்ததைவிட, இன்று எல்லாத்துறைகளிலும், காங்கிரஸ், கேடு தருவதாக இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

சிறையிலே தள்ளிச் சித்திரவதை செய்வதிலும், தெருவில் செல்வோரைத் துரத்தித் துரத்தி அடிப்பதிலும், மிரண்டு ஓடுவோரைச் சுட்டுக் கொல்வதிலும், காங்கிரஸ் பயங்கரமான பயிற்சிபெற்று விட்டிருப்பது காண்கிறோம்.

இன்று எந்த இடத்தில் துப்பாக்கிப் பிரயோகம், ஊரடங்கு சட்டம். எந்த இடத்தில் எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டனர் என்று வெளியிடப்பட்டிருக்கிறதோ என்ற பயத்துடன்தான், நாளிதழ்களைப் பிரித்துப் படிக்கவேண்டி இருக்கிறது.

சென்ற பொதுத் தேர்தலின்போது, காங்கிரசாட்சியினால் விழுந்தபிணங்களின் எண்ணிக்கையைக் கூறினோம் - இந்தத் தடவை கூறும்போது, முன்பு எவ்வளவோமேல் என்று சொல்லத்தக்கவிதமாகத் தான் இப்போதைய ஆட்சி அலங்கோலம் இருக்கிறது.

மக்களின் 'வாழ்வு' முன்பு இருந்ததைவிட இப்போது மோசமாகி இருக்கிறது.

தொழில் வளம்—தென்னாட்டைப் பொறுத்த மட்டில், இந்த ஐந்தாண்டுகளில் எந்த விதத்திலும் வளர்ச்சி அடையவில்லை.

இதனைச் சிற்சில சமயங்களில் காங்கிரஸ் அமைச்சர்களே கூறி அழுகிறார்கள்.

இவை எதனையும் மறுத்திடவுமில்லை. ஆனாலும், காமராஜர் நல்லவர், அவர் மறுபடியும் ஆட்சிபுரிய வேண்டும், ஆகவே அவருடைய வெற்றிக்காகத்தான் வேலை செய்யப்போகிறோம், அவர் வெற்றிபெறுவது, தமிழர்களுக்கு ஒரு 'வரப்பிரசாதம்' என்று எண்ணுகிறோம், என்பதாகக் கூறுகிறார்களே, இவர்களேதான் ஆயிரம் ஐந்து ரூபாய் என்று போஸ்டர் போட்டு நாட்டவருக்குக் கொடுத்தார்கள்.

இப்போது ஒருசமயம், காங்கிரசை மறவாதீர்கள்! ஓட்டுகளைக் குவியுங்கள்!—என்று போஸ்டர் போட வேண்டிய நிலைமை வருகிறதோ. அல்லது

நாடு வாழ மாடு வேண்டும்
மக்கள் ஓட்டு மாட்டுப் பெட்டிக்கே!
காளைமாட்டுப் பெட்டி
காமராஜர் வைக்கும் பெட்டி

என்று விதவிதமான போட்டர்கள், பச்சை, நீலம் ஊதா கலர்களில் வெளியிட்டு விற்பனைக்குத் தரப்படுமோ என்னமோ, யார் கண்டார்கள்!

இல்லை, அண்ணா! அப்படி எல்லாம் போடமாட்டார்கள், கூச்சமாக இருக்குமல்லவா, வேண்டுமானால், நம்மீது உள்ள வெறுப்பைக் காட்டுகிற முறையில்

கண்ணீர்த்துளிக்கு வேட்டு
காமராஜருக்கே ஓட்டு

என்று வெளியிடக்கூடும்—அல்லது இன்னமும் இழிமொழி அழகுடன் வெளியிடக்கூடும் என்று கூறுவாய்; எவ்விதமான, முறையைக் கையாண்டாலும், தம்பி, நாடும் நாமும், காங்கிரஸ் குறித்து, பெரியார் கொண்டுள்ள கருத்து என்ன என்பதை எப்படி மறந்துவிட முடியும்.

அவர் என்ன, பட்டும் படாததுமாகவா, கூறியிருக்கிறார்.

பொறி பறக்கப்பறக்கப் பேசி இருக்கிறார்—பசுமரத்தாணி போலல்லவா பதிந்திருக்கிறது.

நான் கூடச் சில வேளைகளில், ஏன் வீணான தொல்லை, சஞ்சலம், சங்கடம், சிக்கல்—காங்கிரசே வந்து தொலைந்து போகட்டுமே, நமக்கென்னவென்று இருந்துவிடுவோமே, நாம் எதற்கு வம்புதனை விலை கொடுத்து வாங்குவதுபோல, தேர்தலில் காங்கிரசை எதிர்த்து நின்று இடர்ப்படவேண்டும், என்று சலிப்புடன் எண்ணிக்கொள்வதுண்டு. ஆனால் அடுத்த கணமே அவருடைய உருவம் தோன்றும் மனக்கண் முன்பு, "அடே அறிவிலி! எவ்வளவு இடித்திடித்துக் கூறினேன்—எத்துணை அருமையான காரணம் காட்டினேன், காங்கிரஸ், ஆட்சிக்கு வரவிடக்கூடாது என்று; இவ்வளவும் கேட்டுவிட்டு, இனியும் இளித்தவாயனாவதா! காங்கிரசை எதிர்த்து நிற்கும் ஆற்றலை எவ்வளவு தந்தேன்—எங்கே போயிற்று அந்த ஆற்றல்! விழலுக்கு இறைத்த நீராயிற்று என் அறிவுரை விளக்கம்!" என்று கேட்டுக் கேலிசெய்கிறதே, என்செய்வேன்? இதோ கேளேன், தம்பி, ஒரு விளக்கம்—அ[illegible] அருளியது:

"காங்கிரஸ் ஒழிந்த ஒரே வருடத்தில்

பட்டினி என்று பரதவிக்கும் பாமர மக்களைப் பார்க்கவே முடியாதே! கஞ்சியின்றிப் பிச்சை எடுத்துத் திரியும் தொழிலாளி நெசவாளி மக்களைக் காணமுடியாதே!''

என்னென்ன இன்ப அலைகள் நெஞ்சில் கிளம்புகிறது, இந்த அரசியல் விளக்கம் கேட்கும்போது.

பாமரன் பட்டினி கிடக்கமாட்டான். பாட்டாளிக்குத் துன்பம் இல்லை!

இதைவிட 'வெற்றி' வேறு என்ன காணமுடியும்?

இந்த இன்ப நாள் காணக் காங்கிரஸ் ஒழிய வேண்டும், என்கிறார்—காங்கிரஸ் ஒழிந்த ஒரே வருடத்திலே, இந்த இன்பநிலை ஏற்படும் என்று கூறுகிறார்.

இதை எண்ணத்தில் பதியவைத்துக் கொண்டான பிறகு, காங்கிரசை எதிர்க்காமலிருக்க முடிகிறதோ!! உன்னாலும் என்னாலும் முடியவில்லை!! காமராஜர் நல்லவர், ஆகவே, இப்போதைக்கு, காங்கிரஸ் ஒழிப்பு வேலையை நிறுத்தி வைக்கலாம் என்று வாதிட முடிகிறது அவர்களால். நமக்கோ அந்த வாதம், மயக்கமளிக்கிறது.

காரணம் காட்டும்போது, கசடனே! நீ, பழங்காலப் பேச்சையே, புட்டுப்புட்டுக் காட்டிக்கொண்டு கிடக்கிறாயே, சரியாகுமா? நல்லவர் நம்மவர் என்று பெரியாரால் பரிவுடன் அழைக்கப்படும் பேறு பெற்றவர், காமராஜர், ஆட்சி புரியக்கண்டு உளம் மகிழ்ந்தோம், அவருடைய ஆட்சித் திறமையால் ஏற்பட்ட நன்மைகள் பலப்பல, மறுபடியும் அவர் ஆட்சி ஏற்படின் இன்னும் எண்ணற்ற நன்மைகள் கிடைத்திடும்—எனவேதான், இப்போது 'புதிய போர்முறை' வகுத்திருக்கிறோம்—நீ சுத்தக் 'கர்நாடகமாக' இருக்கிறாயே, எப்போதோ அவர் சொன்ன அந்தப் பழைய விஷயத்தைக் கிளறிக்கொண்டிருக்கிறாயே, இப்போது புதிய முறை இதைப் புரிந்துகொள் என்று சிலர் கூறிடக் கேட்டிருப்பாய்.

காரணம் என்ன கூறப்பட்டாலும், கடமையிலிருந்து துளியும் தவறாதே! துரோகம் இழைக்காதே! —என்று பெரியார் எச்சரித்திருக்கிறார்—மிகுந்த கோபத்துடன், சாபமிடுவதுபோலப் பேசியிருக்கிறார்—அது என் நினைவிலே நின்று, வாட்டுகிறது, வதைக்கிறது, தவறி நடக்காதே என்று எச்சரிக்கை செய்கிறதே, நான் என்ன செய்யமுடியும்.

நாட்டுக்குத் துரோகம் திராவிட மக்களுக்குத் துரோகம்

தகப்பன், தாய், பெண்டு பிள்ளைக்குச் செய்யும் தீங்கு

எது? காங்கிரசுக்கு யாராவது ஒரு ஓட்டு போடுவார்களானாலும் கூட இத்தனை 'பாபமும்'பற்றிக்கொள்ளும் என்று பெரியார் கூறியிருக்கிறார்.

காரணம் கூறினால், போதாது என்கிறார்.

ஒரு ஓட்டுப்போட்டாலும் கெட்டுவிடும் காரியம்—துரோகிப் பட்டியலில் உன் பெயர் இடம்பெற்றுவிடும் என்கிறார்.

அவர் கூறும் அறிவுரை முழுவதையும், கேள், தம்பி, கேள்.

''ஒவ்வொருவரும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் காங்கிரஸ் பெட்டியில் ஓட்டு போடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நமது கடமை. இதை மறந்து யாராவது ஒரு ஓட்டுக்கூட போடுவார்களானால் அது இந்த நாட்டுக்குச் செய்த துரோகம் மாத்திரமல்ல, திராவிட மக்களுக்குச் செய்கிற துரோகம் மாத்திரமல்ல, ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் தன் தகப்பன் தாய், பெண்டு பிள்ளைகளுக்குச் செய்யும் பெருந் தீங்கு''

இவ்வளவு கடுமையாக அவர் எச்சரித்திருக்கும் போது, காமராஜர் நல்லவர் என்று ஒரு காரணம் காட்டி, காங்கிரசை எதிர்க்காமலிருக்க வேண்டும் என்று எப்படித் தம்பி, நான் உனக்குக் கூறமுடியும்—நாடு நகைக்காதா? நல்லோர் கைகொட்டிச் சிரிக்க மாட்டார்களா?

நாட்டு மக்களிலே, பொதுநல நோக்கமற்றோர் சிலர், காங்கிரசைச் சுயநலம் கருதி ஆதரித்து மீண்டும் காங்கிரசாட்சி ஏற்பட வழி செய்து விடுவார்களோ என்ற கவலை கலக்கும் நிலையில், பெரியார், அப்படி ஒரு நிலை ஏற்பட்டால், அது நாட்டுக்கு எத்துணைப் பெரிய நாசம் என்பதை எடுத்துரைத்திருக்கிறார்—தம்பி—கேட்டால் நடுக்கம் பிறக்கும் உனக்கு—காங்கிரசாட்சியை எதிர்த்திட கல்லுருவும் உயிர்பெற்று எழத் துணியும் என்றுகூட, கற்பனை அலங்காரத்துடன் பேசுவாய்.

''நம்மைப் பொறுத்தமட்டில் மீண்டும் காங்கிரஸ் கட்சி ஆதிக்கத்திற்கு வருவதைவிட உலகப் போர் வந்து, இந்தியாவின் பெரும் பகுதி மக்கள் அணுகுண்டுக்கு இரையாகி மடிவதே சிறந்த சிறந்த முடிவு என்போம். சித்திரவதையைக் காட்டிலும் திடீர் மரணம் மேலானதல்லவா!''

சித்திரவதை! — காங்கிரசாட்சி மீண்டும் ஏற்படுவது, மரணத்தினும் கொடியது என்றாலும், அவர் எம்மிடம் சிரித்துப் பேசுகிறார், ஆகவே, இந்தத் தடவை சித்திரவதையைச் சகித்துக்கொள்ளும்படி செந்தமிழ் நாட்டவருக்குக் கூறுவோம் வாரீர் என்று நாட்டு மக்களை அழைத்திட என்னால் எப்படித் தம்பி முடியும்! அவர்கள் அழைக்கிறார்கள்!

நான், முன்பு பெரியார் காங்கிரஸ் குறித்துச் சொன்னதை மறவாமலிருக்கிறேன்—மாற மறுக்கிறேன்.

''காங்கிரஸ்காரர்கள் ஆளத் தகுதியற்றவர்கள். அவர்களுக்கு நிர்வாகத் திறமையில்லை.

காங்கிரசின் பெயரைச் சொல்லிக்கொண்டு, காந்தியின் பெயரைச் சொல்லிக்கொண்டு, கதர் வேஷம் போட்டுக்கொண்டு ஏமாற்றுகிறவர்கள் ஜனநாயகம் என்று சொல்லிக்கொண்டு—மக்கள் அரசாங்கம் என்று சொல்லிக்கொண்டு பதவி வேட்டை ஆடுகிறவர்கள். மக்களுடைய கருத்தை அலட்சியம் பண்ணிவிட்டுத் தங்களுடைய விருப்படி அதிகாரம் செலுத்த ஆசைப்படும் எதேச்சாதிகார வெறியர்கள்.''

அந்த வெறியர்களிலே வேண்டியவர்கள்—வேண்டாதவர்கள் என்று பாகுபாடு என்ன தேவைப்படுகிறது. பெரியாரின் 'பாஷை'யில் கேட்கிறேன், எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி?

காமராஜர் நல்லவர், என்கிறார்கள்—எனக்குப்

பெரியார் பேசும் அந்தப் பழமொழி நினைவிற்கு வருகிறது.

நேருவுக்கு வலது கரம், பார்பனப் பாதுகாவலர், முதலாளிக்கு இரும்புத் தூண், அடிதடியாட்சிக் கர்த்தா, கொலை பாதக ஆட்சிக்கு உடந்தையானவர்,

இவை, காமராஜருக்கு விடுதலை சூட்டிய பட்டங்கள்,

முன்பு தேர்தலில் திருவில்லிபுத்தூர் தொகுதியில் நின்று காமராஜர் வெற்றி பெற்ருர்—அப்போது அவர் தோற்க வேண்டும் என்பதற்காகப் பட்டபாடு வீணனது கண்டு, மனம் வெதும்பி "எப்படிப்பட்ட ஆசாமி" வெற்றிபெற்று விட்டார், ஐயோ! தமிழகமே உன் கதி இதுவாகவா போகவேண்டும்" என்று கொதித்தெழுந்து கேட்டு, விடுதலை தீட்டிற்று. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் — அடிதடியாட்சிக்குக் காரணமாயிருந்த தலைவரை— எதிர்க்கட்சிக்காரர்களைச் சுட்டு கொன்ற கொலைபாதக ஆட்சிக்குக் காரணமாயிருந்த கட்சித் தலைவரை தோற்கடித்து உலகப் புகழ்பெற வேண்டுமென்று கருதியிருந்த தமிழர்கள் ஏமாந்துவிட்டனர்.

இராவணீயம் தோற்றுவிட்டது. விபீஷணத்துவம் வெற்றிபெற்றுவிட்டது."

தம்பி! இப்போது இந்த விபூஷணத்துவ வெற்றியிலேதான் தமிழரின் நல்வாழ்வே இருக்கிறது என்று எடுத்துக் கூறுகிருர்கள்—நியாயந்தான?

விபீஷணன், இராவணனகிவிடவுமில்லை; விபீஷணன் இராவணன் ஆகியோர்பற்றிக் கொண்டுள்ள கருத்தும் மாற்றிக்கொள்ளப்படவில்லை; ஆனல் திருவில்லிபுதூரில் வெற்றிபெற்ற காமராஜர், விபீஷணர்; இன்று அவர் தமிழர் தலைவர்!! ஏன்? ஏன்?

திருவில்லிபுத்தூரில் வெற்றி பெறுவதற்காகக் காமராஜர் ஊரூர் சுற்றி ஓட்டுக் கேட்டுக் கொண்டிருந்தபோது, அவர் எப்படிப்படடவர் என்பதுபற்றி விடுதலையில் 'விமர்சனம்' வெளிவந்தது, அதையும் கொஞ்சம் பார்—அவர்களிலே பொறுமைசாலிகள் கிடைத்தால் பார்க்கச் சொல்லு;

நாடாரின் வாய்ப்புக் குறித்து கேட்டேன், இதற்கு ஒரு குடிமகன் கூறியதாவது:—

காங்கிரஸ் தலைவர்-காமராஜ நாடாருக்கு இங்கு செல்வாக்கில்லை. அவர் எங்கு சென்ருலும் யாரோ என்று மக்கள் அலட்சியமாகக் கருதுகின்றனர்.

அவருக்கு அரசியல்பற்றி மூலாதார அறிவே கிடையாது.

"நாடாரால் அரசியல் சூழ்ச்சிகள்தான் நாம் தெரிந்துகொள்ள முடிந்தது. போதும் அச்சூழ்ச்சிகள்"

"முதலமைச்சராயிருந்த கண்ணியமான அரசியல்வாதியான ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரை மேற்படி பதவியிலிருந்து நீக்கியதற்கு நாடார்தான் பொறுப்பாளி. அவ்வாறு இருக்க, நாடாருக்கு ஏன் நாங்கள் எங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்"

"நாடாரைப் போன்ற சுயசாதிப் பித்தரைப் பார்க்க முடியாது. சுய சாதியிலும் தமக்கு வேண்டிய நண்பர்களுக்கே சலுகை காட்டுவார். எனவே நாடார்களிலே பெரும்பாலோர் அவருக்கு எதிராகவே இருப்பர்"

இருக்கலாம்! திருவில்லிபுத்தூர் தேர்தலின்போது காமராஜரின் குணதிசயம் அவ்விதம் இருந்திருக்கலாம் —பிறகு அவர், படிப்படியாக, மெல்ல மெல்ல, நல்லவராகிவிட்டிருக்கக்கூடாதா, என்று கேட்கத்தோன்றும் தம்பி, அந்த ஆராய்ச்சியும் சிறிதளவு செய்தே பார்த்துவிடுவோமே, அதிலென்ன கஷ்டம்.

"காமராசர் தோற்ருர் என்ற செய்தியினுல் இந்த மாகாணம் மட்டுமல்ல, இந்த நாடே எவ்வளவு கிடுகிடுத்துப் போயிருக்கும். நேருவுக்கு வலது கையாகவும், பார்ப்பனர்களுக்கு நீங்காத் துணையாகவும், முதலாளிகளுக்கு இரும்புத் தூணகவும் இருக்கின்ற ஒருவரைத் தோற்கடிக்கக்கூடிய தலைசிறந்த வாய்ப்பைத் தமிழ் மக்கள் தங்கமணிக்குப் பயந்துகொண்டு விருதுநகரைவிட்டு ஓடி, சென்னைராஜ்ய சட்டசபையையும் விட்டு ஓடி பார்லிமெண்ட் அபேட்சகராக நின்ற ஒரு காங்கிரஸ் தலைவரை தோற்கடிக்கக் கூடிய தங்கமான வாய்ப்பைப் பாழாக்கிவிட்டார்களே படுமோசக்காரர்கள்"

என்று விடுதலையில் எழுதப்பட்டது; இதை எல்லாம் கண்டு காமராஜர் திருந்திவிட்டிருக்கக்கூடாதா என்று கேட்போர் எழக்கூடும் அல்லவா? அதையும் கவனிப்போம். தவறென்ன!

காவடி தூக்கினர்
கன்னத்தில் போட்டுக்கொண்டார்
காலில் வீழ்ந்தார்
தோள்மீது சுமந்தார்
கோவை சுப்பிரமணியத்தை அடுத்துக் கெடுத்தார்!

இவ்வளவு, திடுக்கிடக் கூடிய கேடுகளை, இழிவு என்றும் பாராமல் செய்த ஆசாமி யார் இப்படி ஒரு தமிழ்ப் பண்பு இழந்தவரை நாடு தாங்கிக்கொண்டிருக்கிறதா? தமிழ் மண்ணிலேயா தாசர் புத்தி தலைக்கேறிய 'ஜென்மம்' இருக்கிறது!—என்றெல்லாம் கேட்கத் தோன்றும். ஆசாமி யார், என்பதை அறிந்து கொள்வதற்கு முன்பு, அரசியல் சம்பவம் என்ன என்பதுபற்றி அறிந்துகொள்வோம்.

பொதுத் தேர்தல் முடிந்து, காங்கிரஸ் இளைத்து, ஈளைகட்டி எதிர்க்கட்சிகள் ஒன்றுகூடி என்ன செய்யுமோ என்று கிலிகொண்டிருந்தது.

அப்போது தமிழ்நாடு காங்கிரசுக்கு காமராஜர்தான் கக்கன்.

காங்கிரஸ் குலைந்துவிடாது இருக்கவும், மந்திரி சபை அமைக்கவும் ஆச்சாரியாருடைய தயவு தேவைப்பட்டது.

ஆச்சாரியாருக்கும் தனக்கும் நீண்டகாலமாக இருந்துவரும் விரோதத்தை, இந்தச் சமயம் கவனித்தால் காரியம் கெட்டுவிடும் என்று கருதிய காமராஜர், காங்கிரஸ் கட்சி சார்பில் மந்திரிசபை அமைத்து நடத்திச் செல்லும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி ஆச்சாரியாரிடம் சென்று, "பயபக்தி விசுவாசத்துடன்" பணிந்து கேட்டார்.

அந்த "அடிமைப் புத்தியை"க் கண்டித்து காரசாரமாக விடுதலை எழுதிற்று—அதுபோது கிடைத்த மணிமொழிகள்தான் முன்னலே உள்ளன,

"திருப்பரங்குன்றத்தில் தங்களைக் குப்புறத் தள்ளியதற்காகக் கன்னத்தில் போட்டுக்கொள்கிருேம், திராவிடர்களாகிய எங்களில் யாருக்கும் தலைமைப் பதவிக்கான தகுதி கிடையாது. நாங்களெல்லாரும்

With the best compliments from:

Venkateswara Engineering Contractor

POLLACHI.

அடிமுட்டாள்கள், நெல்லிக்காய் மூட்டைகள், உதவாக்கரையான சுரைக்காய் குடுக்கைகள். தங்கள் திருப்பாதங்களைக் கண்ணில் ஒத்திக்கொள்கிறோம். தயவு கூர்ந்து கருணை புரியுங்கள், மீண்டும் பதவியேற்று எங்களுக்கு நல்லபுத்தி கற்பியுங்கள்"

என்று கூறுவதுபோல அவர் வீட்டுக்கு நூறு தடவை காவடி தூக்கி மண்டியிட்டு வணங்கி, தோள் மீது சுமந்துவந்து தலைமைப் பீடத்தில் அமர்த்திவிட்டனர்.

தோழர் காமராசர் கோவை சுப்ரமணியத்திடம் கூடவே இருப்பதுபோல நடித்து, இறுதியில் அவரைக் கவிழ்த்துவிட்டு ஆச்சாரியாரிடம் அடைக்கலம் புகப் போகிறார் என்று ஒரு வாரத்துக்கு முன்பே பல முக்கிய நண்பர்கள் பேசிக்கொண்டனர். அது தவறு என்று கருதினோம். ஆனால் இன்று உண்மையாகிவிட்டது!!

எனவே, திருவில்லிபுத்தூரில் எந்தக் காமராஜர் தெரிந்தாரோ அவரேதான், பிறகும் தெரிகிறார்—விடுதலையின் கண்ணோட்டத்தின்படி.

காங்கிரஸ் கட்சியின் கண்ணியத்தையும், செல்வாக்கையும் காப்பாற்றுவதற்காக, சொந்தத்தில் இருந்து வந்த பகையையும் மறந்தது பெருந்தன்மையல்லவா! சொந்தத்தில் 'மானாபிமானம்' பார்த்துக்கொண்டு, கட்சி எக்கேடோ கெட்டுப் போகட்டும் என்று அவர் இருந்து விடவில்லை. இதிலிருந்தே அவர் எவ்வளவு நேர்மையுணர்ச்சி கொண்டவர், கட்சிப் பற்றுக் கொண்டவர் என்பது தெரியவில்லையா?

காங்கிரசுக்குள்ளேயோ பிளவு இருக்கிறது—காமராஜ் காங்கிரஸ்—ராஜாஜி காங்கிரஸ் என்று கோஷ்டிச் சண்டை இருக்கிறது, கோட்டைக்குள்ளே குத்தும் வெட்டும் இருக்கும் இந்தச் சமயம்தான் அந்தக் கட்சியை ஒழித்துக் கட்ட ஏற்றது என்று காங்கிரஸ் விரோதிகள் எண்ணுவார்கள். இதற்கு நாம் இடமளிக்கக் கூடாது, நமக்கும் இராஜகோபால ஆச்சாரியாருக்கும் சொந்தத்தில் ஆயிரத்தெட்டு விரோதம் இருக்கலாம், அதற்காகக் காங்கிரசுக்குக் கேடுவர சம்மதிக்கக் கூடாது, இப்போது நாம் எப்படியாவது ஆச்சாரியார் துணையைப் பெறவேண்டும் என்று எண்ணிக் காரிய மாற்றியது மிகத் திறமையான இராஜதந்திரமல்லவா?

இவ்விதமெல்லாம் கூறவில்லை,

காவடி தூக்கினார்
காலடி வீழ்ந்தார்
கன்னத்தில் போட்டுக்கொண்டார்

என்று சொன்னதுடன், கோவை சுப்ரமணியத்தை அடுத்துக் கெடுத்தார் என்றுதான் கூறப்பட்டது.

காங்கிரஸ் அமைச்சு நடைபெறுகிறது—பெரியார் போர்க்கொடி உயர்த்தினார், வடநாட்டுத் துணிக்கடை, உண்டிச் சாலைகளின் முன்பு மறியல் நடத்தினார். அப்போது, காமராஜர் என்ன செய்தார்?

ஆட்சியில் உள்ளவர்கள் உண்டு, பெரியார் உண்டு, நமக்கென்ன என்று இருந்தாரா? இல்லை!

இதென்ன மறியல்! நாங்கள் செய்த மறியல், மகத்தானது தூய்மையானது—அது சத்யாக்கிரகம் — இது துராக்கிரகம்—என்று கண்டித்தார்.

அடக்குவோம், ஒடுக்குவோம் என்று ஆர்ப்பரித்தார்.

ஆட்சியாளருக்கு இவர் 'வக்காலத்து' வாங்கிக்கொண்டு பேசினார்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் என்ற முறையில், அது அவருடைய கடமை அல்லவா, என்று கேட்பர், ஆம்! ஆம்! கடமை! அதனைக் குறைகூற அல்ல இது போது கூறுவது, அந்தச் சமயத்தில் காமராஜர், நல்லவர்—நம்மவர் என்று கூறத்தக்க நிலையில் இல்லை என்பதை நினைவூட்டத்தான்.

காமராஜர் அத்துடன் விடவில்லை; மறியலுக்கு எதிர் மறியல் செய்யப் போவதாகக் கூறினார். எடுத்தனர் எழுதுகோல்—தொடுத்தனர் பாணம்—காமராசர் என்றோர் தலைப்பில் தலையங்கம் வெளிவந்தது விடுதலையில்—அதிலே, காமராசரின் படப்பிடிப்பு முதல் தரமாக அமைந்திருக்கிறது—காண்போம் தம்பி, காண்போம்.

> "காமராஜர் இன்றைய இந்த தமிழ்நாட்டில் தன்னை ஒரு சர்வாதிகாரி ஸ்டாலின் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார். சர்க்கார் தன் காலடியில் இருப்பதாகவும், மந்திரிகள் தன்னுடைய அடிமைகள் வேலைக்காரர்கள் என்றும் எண்ணிக்கொண்டிருக்கிறார்."

எடுத்த எடுப்பிலேயே, விடுத்த கணை 'விர்'ரென்று பாய்கிறது பார்த்தாயா தம்பி,

அகம்பாவம்
ஆணவம்
அதிகார வெறி

எனும் கொடிய குணங்கள் குடிகொண்டவராக, சர்வாதிகாரியாக இருக்கிறார், என்று, சவுக்கடி கொடுத்த விடுதலை, மேலும் எழுதுகிறது.

> "காமராஜர் யார்? அவரின் இயற்கை நிலை என்ன? எப்படி இருந்தவர்? என்ன காரணத்தால் இவர் பொதுவாழ்வில் மதிக்க வேண்டியவரானார்? இன்றைய வாழ்வு இவருக்கு எப்படி வந்தது? இவருடைய பொருளாதாரம், கல்வி, பொது அறிவு, அரசியல் திறமை, தகுதி, திறமை நேர்மை, அனுபவம், ஒழுக்கம் எவ்வளவு? என்பவைகளான விஷயங்களை இவரே சிந்தித்துப் பார்ப்பாரானால் இவர் இப்போது பேசும் பேச்சுகளுக்கு தான் தகுதியுடையவரா? இந்தப் பேச்சுகள் பேசுவது தன் பேரால் இருந்துவரும் பதவிக்கு ஏற்றதா என்பது விளங்குவதோடு மிகுதியும் வெட்கப்படுவார் என்றே கருதுகிறோம்"

காமராஜர்மீது இந்தக் கடும் தாக்குதலை நடத்தினால் மட்டும் போதாது, இதில் ஒளிவு மறைவு என்ன, மக்களிடம் வெளிப்படையாகக் கூறிவிட வேண்டியது தான், என்று தீர்மானித்து, காமராஜரின் முகமூடியைப் பிய்த்தெறிந்து, இந்த அவலட்சணத்தை நீங்களே பாருங்கள் என்று மக்களிடம் காட்டுவதுபோல, விடுதலை, மேலால் எழுதுகிறது;

> "காங்கிரசானது முதல் தர மக்களிடமிருந்து பிடுங்கி மூன்றாந்தர மக்களிடம் ஒப்புவிக்கப்பட்டாலொழிய தங்களால் இந்த நாட்டில் வாழமுடியாது என்கின்ற நிலை, பார்ப்பனர்களுக்கு ஏற்பட்டபோது, அந்தமாதிரி நிலை பார்ப்பனருக்கு ஏற்படும்படியாக சுயமரியாதை இயக்கம் செய்துவிட்டதன் பயனாய் பார்ப்பனர்கள் தேடிப் பிடித்த ஆள்களில் ஒருவராக காமராஜர் பார்ப்பனர்களுக்குக் கிடைத்தவரே தவிர, அதற்கேற்ற காமராஜரின் தகுதி என்ன என்று சிந்திக்கப் பொதுமக்களை வேண்டுகிறோம்"

தம்பி! நீயும் நானும் காங்கிரஸ் வரலாற்றிலே பெரும் பகுதியை, படித்துத் தெரிந்து கொண்டவர்கள்—பெரியார் அப்படி அல்ல; அவர் அந்தச் சம்பவங்களிலேயே தொடர்பு கொண்டிருந்தவர் காங்கிரசின் தலைவர்களின் கொடிவழிப்பட்டி அறிந்தவர்—யாரார் என்னென்ன யோக்யதை உள்ளவர் என்பதைத் தெரிந்தவர்—எவரெவர் எப்படி எப்படிக் காங்கிரசுக்குள் வந்து சேர்ந்தனர் என்ற 'கதைகள்' அவருக்குத் தெரியும்.

அவர் கூறுகிறார், இந்தக் காமராஜர், பார்ப்பனர்கள் தேடிப் பிடித்துக்கொண்டு வந்து சேர்த்தவர்களிலே ஒருவர் என்று.

மூன்றாந்தரம்!! என்பதைக் கூறிவிட்டு, சந்தேகமிருப்போர்,

கல்வி
பொது அறிவு
ஒழுக்கம்
அனுபவம்
நேர்மை
தகுதி
திறமை

என்ற இவைகளைக் கவனித்துப் பார்த்து, இந்தக் காமராஜர் யார் என்பதைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள் என்று கூறுகிறார்—ஆண்டு ஆறுதான் உருண்டோடியுள்ளன, அந்த அரிய கருத்துரை நாட்டுக்கு அளிக்கப்பட்ட பிறகு.

பதவியும், அதிகாரிகளை மிரட்டி வளைய வைக்கும் வாய்ப்பும் இருந்தால், அகம்பாவம் ஏற்பட்டு. எப்படிப்பட்டவர்களையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசும் துணிவு கிளம்பும். இது காமராஜர் விஷயத்தில் முற்றிலும் உண்மையாகிவிட்டது என்பதையும், விடுதலை விளக்குகிறது.

> "காமராஜருடைய பதவி காரணமாக காமராஜருக்கு சில அதிகாரிகள் அடங்கி நடக்க வேண்டியதாகவும், காமராஜர் சிபார்சின்மேல் பதவிபெற வேண்டியவர்களாகவும், பல பெரும் தப்பிதங்கள் செய்து தப்பித்துக் கொள்ள வேண்டியவர்களாகவும் இருக்கும்படியான நிலையில் இருப்பதால் காமராஜர் உண்மையிலேயே தான் ஏதோ பெரிய பதவியில் இருக்கும் சர்வாதிகாரி என்பதாகக் கருதிக்கொண்டு அகம்பாவ வெறியில் இருக்கிறார்"

பெரியார் பொதுமக்களைச் சிந்தித்துப் பார்க்கும்படி

கேட்டுக் கொண்டதற்கு ஏற்ப, இப்போதும் நாம் சிந்தித்துப் பார்க்கிறேம், தம்பி காமராஜர்,

கல்வி

திறமை

பொது அறிவு

அனுபவம்

எனும் அருங்குணங்களின் பெட்டகம் என்று முடிவு கட்ட, மனம் இடம் தரவில்லை. பார்ப்பனர்களின் கையாள் என்ற பேச்சும், முதலாளிகளின் பாதுகாவலர் என்ற பேச்சும், பொருளற்றுப்போய்விட்டதாகத் தெரியவில்லை; அன்று போலவே இன்றும் காமராசர் திராவிட இனஉணர்ச்சிக்கு மதிப்பளிக்க மறுக்கும் மகானுபாவராக இருப்பது கண்கூடாகத் தெரிகிறது — இந்நிலையில் என்ன காரணத்துக்காக அவர் நல்லவர்—நம்மவர் என்று கொள்வது?

இராஜ ரத்தினம்

சுந்தர வடிவேலு

என்று பட்டியல் கொடுத்தால், ஆச்சாரியார் காலத்து

சபாநாயகம்

சிங்காரவேலு

தேவ சகாயம்

ஞானசம்பந்தம்

என்றும் அடுக்கிக்கொண்டே போகலாமே!!

எனவே, விபீஷணன் என்று திருவில்லிபுத்தூரின் போது காட்டப்பட்ட காமராஜர், அதே போக்கிலே தான் இருக்கிறர் நோக்கமும் வேறு ஆகிவிடவில்லை.'

காங்கிரசோ, முன்பு இருந்ததைவிட, மக்களுக்கு, குறிப்பாக தென்னகத்து மக்களுக்குக் கேடு விளைவிக்கும் பாசீச அமைப்பாக மாறிக்கொண்டு வருகிறது.

இதைக் கண்டும், தம்பி! நம்மீது உள்ள கோபத்தைக் காரணமாகக் கொண்டு, காமராஜரை ஆதரித்து, அதன் தொடர்பாகக் காங்கிரசை ஆதரித்து, மீண்டும் காங்கிரசாட்சி ஏற்படுத்திவிட்டால், ஏற்பட உடந்தையாக இருந்தால், நாட்டு நிலைமை எப்படி ஆகும்? தம்பி! நான் கூறினல், பொறி பறக்காது; முன்பு பெரியார் சொன்னதை 'இரவலாக'க் கொண்டு உனக்கும் உன் மூலம், நாட்டுக்கும் தருகிறேன்.

"அடுத்த தேர்தலிலேயும் காங்கிரசு பதவிக்கு வந்து விட்டால் என்ன நடக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? நாட்டில் மனித ஆட்சியா நடக்கும்? அசல் கரடி, புலி, ஓநாய், சிறுத்தை, சிங்கம் ஆளுகிற மாதிரியான எதிர்ப்பட்டதை அடித்துக் கொல்லுவதான முறையில்தான் மிருக ஆட்சிதான் நிச்சயம் நடக்கும்"

அப்படிப்பட்ட 'மிருக ஆட்சி' ஏற்படக்கூடாது, எச்சரிக்கையாக இருங்கள், காங்கிரஸ் கட்சியைப் பாசீச ஸ்தாபனமாக்கி விடாதீர்கள் என்று மக்களிடம் இந்தத் தேர்தலின்போது எடுத்துக் கூறுவோம், தம்பி, நம்மாலே, காங்கிரசின் கேடுபாடு குறித்தும், காமராசரின் திருக்கலியாண குணம் பற்றியும், ஆணித்தரமாக எடுத்துக்கூற முடியாதபோது, காமராஜர் குறித்தும் காங்கிரஸ் பற்றியும், 'விடுதலை' நாட்டுக்குத் தந்துள்ள விளக்க உரைகளைத் தொகுத்து அளித்தாலே போதும், சூடும் சுவையும் நிரம்ப உண்டு.

குரங்குகைப் பூமாலைபோல, காங்கிரசு சர்க்கார் வரிப்பணம் போல,

யானை உண்ட முலாம் பழம் போல! காங்கிரசு நிதிக்குக்கொடுத்த பணம்போல.

பெருச்சாளி புகுந்த வீடுபோல! காங்கிரஸ் சர்க்கார் ஆண்ட நாடுபோல!

இப்படிப்பட்ட அரசியல் பழமொழிகள் — படப்பிடிப்புகள் — கண்டனங்கள்—விளக்கங்கள்—ஏராளம்—ஏராளம்!!

பேரகராதி நமக்குப் பெருந்துணை புரியும்!!

அண்ணன்,



(2—9—56 திராவிட நாடு இதழில்)

உள்ளத்தில் உள்ளே....!

—உடுமலை நன்னன்—

"அம்மா, நான்போய் முதலாளி கிட்டச் சொல்லிட்டு வர்றேன்" என்று மாணிக்கம் தன் தாயிடம் சொன்னான்.

"சரியப்பா முதல்லே முதலாளி கிட்டத்தான் சொல்லணும்" என்று மாணிக்கத்தின் தாய் சொன்னாள். மாணிக்கம் வெளியே புறப்பட்டான்.

அவன் இப்போது போவது மினர்வா ஜவுளி ஹாலுக்குத்தான் அந்த ஜவுளி ஹாலில்தான் இவ்வளவு நாளும் மாணிக்கம் துணிக் கிழித்துக் கொடுக்கும் வேலையில் இருந்தான். அவனுடைய மாதச் சம்பளம் ரூபாய் எண்பது இனிமேல் அந்த எண்பது ரூபாய் காசுக்காக அவன் அந்த ஜவுளி ஹாலில் செய்துவந்த துணி கிழிக்கும் வேலையைச் செய்யமாட்டான், அவனுக்கு யோகம் பிறந்துவிட்ட பிறகு எதற்காக எண்பது ரூபாய்க்காகப் பாடுபடப் போகிறன்? ஆமாம் மாணிக்கம் இனிமேல் பழைய மாணிக்கம் இல்லை!

அவனுக்கு ஒரு செல்வச்சீமான் பெண் கொடுக்கப்போகிறர் அப்படி இருக்கும்போது அவன் எதற்கு இன்னொரு பக்கம் தொழில் செய்ய வேண்டும் அதுவும் குறைந்த சம்பளத்தில்?

இவ்வளவு நாளும் அந்தக் குறைந்த சம்பளமே நிறைந்த சம்பளமாக நினைத்துப் பாடுபட்டு வந்

தான். அவனுடைய சுறுசுறுப்பும் உழைப்புமே மினர்வா ஜவுளி ஹாலுக்கு சிறப்பான வளர்ச்சி கொடுத்தது, அந்த நகரத்திலேயே வேறு எந்த துணிக்கடையிலும் இல்லாத உயர்ந்த ஜவுளி ரகங்கள் எல்லாம் அந்த மினர்வா ஜவுளிஹாலில் எப்போதும் இருக்கும். அதனால் தான் செல்வச் சீமான் வேதலிங்கத்தின் மகள் கலா அடிக்கடி மினர்வா ஜவுளி ஹாலுக்கு வரத்துவங்கினாள் அவளுடைய கார் அந்த ஹாலுக்கு வரும்போதே ஹாரன் சத்தம் கேட்கும். அந்த ஒலி நயத்தில்யாருடைய கார் என்பதை மாணிக்கம் தெளிவாக உணர்ந்து கொள்வான், உடனே புது அயிட்டங்கள் என்று உள்ள சரக்குகளை எடுத்து பார்வை மேஜைமீது வைத்துவிடுவான்.

புள்ளிமானைப்போல துள்ளிக் குதித்துக் கொண்டு, ஹாலுக்குள் நுழைவாள் கலா,

மாணிக்கத்தைப் பார்த்து ஒரு புன்னகை செய்வாள். அந்தப் புன்னகை அவளுக்கு அழகின் மகுடமாக இருக்கும். தேவைப்பட்ட துணிகளை வாங்கிக்கொண்டாலும் சரி, கலா, மாணிக்கத்திடம் பேசிக் கொண்டே இருப்பாள், கடை முதலாளி ஒன்றும் சொல்லமாட்டார். பெரிய இடத்துப் பெண் கலா. அவளை யார்தான் என்ன சொல்லிவிட முடியும்? அவளும் பெரிய தந்திரசாலிதான். வேண்டாத ஜவுளி ரகங்களின் விலைகளைக் கேட்டுக் கொண்டே—மாணிக்கத்திடம் வழவழவென்று வம்பளப்பாள். அவளுக்கு அவனிடம் வம்பளப்பதில் ஒரு ஆசை. அவன் நல்ல கட்டான உடல் உடையவன். மாநிறம்தான் என்றாலும் நல்ல அழகன். அவனுக்கும் கலாமீது பற்று ஏற்பட்டது. அவள் கடைக்கு வரும்போதெல்லாம் அவனுக்கும் அவளுக்கும் வெளியே சொல்ல முடியாத ஒரு வித ஏக்கம் தோன்றி அதுவே அன்பின் கொடியாய் வளர்ந்து—மகிழ்ச்சியின் மலராய் விரிந்தது.

பணத்தால் பெறக்கூடியது என்று உலகத்தில் எல்லாவற்றையுமே குறிப்பிட முடியாது. பணம் இல்லாமலே, மனிதன் சில அவசியங்களுக்கு—ஆளாகி அதைப் பெற்று விடுகிறான்.

மனிதன் மூடி மறைக்கின்ற சில ரகசியங்களை, காலம் காட்டிக் கொடுத்து விடுகிறது. அது உண்மைதான் என்பதுபோல கலா, மாணிக்கம் இருவரின் தொடர்பை—காலமகள் வேதலிங்கத்திடம் சொல்லிவிட்டாள். அவர் தன் மகள் ஒரு கூலிக்காரனை விரும்புவதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். அதோடு எரிச்சலும் பட்டார். மகளை லேசுபாசாகக் கண்டிக்கத் துவங்கினார். 'கூலிக்காரப் பயல்களை நம்பக் கூடாது. அவனெல்லாம் பணத்துக்கு ஆசைப்பட்டுத்தான் பணக்கார வீட்டுச் சம்பந்தத்தைத் தேடுகிறார்கள்'' என்று வேதலிங்கம் தன் மகள் கலாவுக்குச் சொன்னார். அதைக் கேட்ட கலா 'ஆமப்பா நீங்க சொல்றது உண்மைதான். நான் அந்தக் கூலிக்காரனை விரும்பலே'' என்று ஒரே மூச்சாக அவள் பதில் சொல்லிவிடவில்லை. எப்படி அவள் சொல்ல முடியும்? நாட்டில் எத்தனையோ திருமணங்கள் வியாபாரம்போல நடத்தப்படுகிறதே—அப்படிப்பட்ட திருமணத்தை அந்தக் கலா—விரும்பி இருந்தால்தானே அப்படிச் சொல்ல முடியும். அவள் திருமணத்தை திருமணமாகவே காண ஆசைப்பட்டாள். அதனால் தான் கூலிக்கார மாணிக்கத்தை நேசித்தாள்.

சில விருப்பங்கள் கட்டுப்பாடுகளை மீறி தானாகவே கொடி கட்டிப் பறக்கிறது. அதற்குப் பெயர்தான்……கா………எந்தப் பெயராகவோ இருந்துவிட்டுப் போகட்டும்.

வேதலிங்கம் முடிந்த அளவு சொல்லிப்பார்த்தார். கலா தன் பிடிவாத குணத்தை மாற்றவில்லை. அவள், அவள் வழியிலேயே உறுதியாக நின்றாள்.

சுயநலம் எந்த ஜீவராசியைத் தான் விட்டிருக்கிறது? முடிவாக—வேதலிங்கம் மாணிக்கத்தின் தாயை அழைத்து தன் மகளுக்கும். மாணிக்கத்துக்கும்—கல்யாணம் செய்து விடலாம் என்று சொன்னார். அதுவரை அந்தத் தாய் தன் மகனைப்பற்றிஅறிய முடியவில்லை. மாணிக்கம் ரகசியமாகவே இருந்துவிட்டான். அவன் தன் தாயிடம் அதுவரை ஒன்றும் சொன்னதே இல்லை என்னவென்று சொல்லுவான். ''பணக்காரன் பெண்ணைக் கட்டப்போறேன்'' என்றுசொல்ல அவனுக்குத் துணிவு வரவில்லை. சொன்னாலும் கேட்டவர் சிரிப்பார் என்று வெட்கப்பட்டான். அதனால்தான் தன் தாயிடமே மறைத்துவிட்டான். ஆனாலும் அந்தத் தாய்க்குக் கோபம் இல்லை. வேதலிங்கம் சொன்னதைக்கேட்டு ஆனந்தப்பட்டாள். மகன்திருமணத்துக்கு சம்மதமும் கொடுத்தாள்.

மினர்வா ஜவுளி ஹாலுக்குள் நுழைந்தான் மாணிக்கம். அவனைப் பார்த்த கடை முதலாளி சிரித்தார், அவர் ஏன் சிரிக்கிறார் என்பது மாணிக்கமும் அறிந்ததுதான். கலாவை அவன் திருமணம் செய்யப் போவது அந்த முதலாளிக்கும் தெரியும். ''வா மாணிக்கம் உட்காரு'' என்றார் ''பரவாயில்லே இருக்கட்டுங்க'' என்று சொல்லி மாணிக்கம் ஒரு ஓரமாக ஒதுங்கி நின்றான். அவனுக்கு முதலாளி மீது தனி மரியாதை உண்டு, காரணம் என்னவென்றால் அவர் கடைக்கு மட்டும் முதலாளி அல்ல, அன்புக்கும் முதலாளி ஆவார். ''மாணிக்கம் நீ ரொம்ப அதிர்ஷ்டக்காரன். வேதலிங்கத்தின் வீடு உனக்குக் கிடைத்திருப்பது லேசானதில்லே அவர் மனம் கோணாமே நடந்துக்கோ'' என்றார். முதலாளி சொன்னதையெல்லாம் கேட்டுக்கொண்டு—''நீங்க சொன்னபடியே நடப்பேன்'' என்றான் மாணிக்கம். முதலாளி அவனிடம் ஒரு உறையை நீட்டி ''மாணிக்கம் இதோ, இதை வச்சுக்கோ, என் அன்பளிப்பு இது'' என்று கொடுத்தார், மாணிக்கம் தட்டாமல் அதை வாங்கிப் பார்த்தான். அதில் நூறு ரூபாய்த்தாள் ஐந்து இருந்தது, அதோடு விடை பெற்றான். திருமணத்துக்கு இன்னும் இரண்டு நாட்களே இருந்தன ''புடிச்சாலும் புளியங்கொம்பாப் புடுச்சாண்டா'' ''எதுக்கும் யோகம் வேணும்'' ''இவ்வளவு நாளும் கூலிக்காரன்தான்……இனிமே….'' ''என்னமோ நாமுந்தான் பொறந்தோம்'' இப்படி மாணிக்கத்தைப் பற்றி அவன் குடியிருந்த தெருவில் உள்ளவர்கள் ஓயாமல் பேசிக் கொண்டே இருந்தார்கள்.

யாருக்கு எது கிடைக்கவேண்டுமோ. அவர்களுக்கு அது கிடைத்துத்தான் தீரும். இதை உபதேசமாகவும் கொள்ளலாம்; அல்லது தத்துவமாகவும் சொல்லலாம்.

புகழ்

புகழ் வீரச் செயல்களின் நறுமணம். —சாக்ரடீஸ்.

இறந்துபோன மனிதனின் இதயத்தின் மேல்வைக்கப்பெறும் மலர்புகழ். —மதர்வெல்.

ஆசையுள்ளவர்களுக்குப் புகழ். தாகமுள்ளவர்களுக்கு உப்புநீர் போன்றது—குடிக்கக் குடிக்கத்தாகம் அதிகமாகும். —பெர்ஸ்.

மண்நாளும் வந்தது. மாணிக்கம் கலா கழுத்தில் தாலி கட்டினான்,

முதல் இரவு மணமக்களுக்குப் புதிய இரவாக இருந்தது. எண்ணச் சிறகுகள் விரிந்தன. வண்ணக் கோலங்கள் தெரிந்தது, இன்ப மணம் பொழிந்தது, இணைப்பில் அமுதம் கலந்தது. இருளும் கலைந்தது. பொழுதும் விடிந்தது.

அடுத்த நாள் வெளியூரில் உள்ள கலாவின் சித்தப்பா மணமக்களை, விருந்துக்காக அழைத்துச் சென்றார்.

ஒரு வாரத்துக்குப்பின் மணமக்கள் ஊர்திரும்பினார்கள். கலா, கார் ஓட்டிக்கொண்டே சுவையான—கதை பேசிக்கொண்டு வந்தாள். கார் சீராக, விரைவாக ஓடிக் கொண்டிருந்தது. அவள் அருகில் உட்கார்ந்த மாணிக்கம் அவள் சொல்லிவந்த கதையை சுவைத்துக் கொண்டு வந்தான்.

கார் ஊர் அருகே வந்துவிட்டது. சாலையில் யாரோ குறுக்கே வந்து விட்டார். கண் இமைக்கும் நேரம் தான். சடாரென்று காரை விலக்கினாள் கலா. பிறகு...?

கண் விழித்துப் பார்த்தான் மாணிக்கம். கையிலும் தலையிலும் கட்டுப் போட்டதோடு—படுக்கையில் இருப்பதை உணர்ந்தான். "கலா" அவன் வாய் முணு முணுத்தது. "அமைதியா இருங்க" டாக்டர் சொன்னார்,

கார் ஒரு மரத்தில் மோதியதோ. அதனால் மாணிக்கம் வெளியே தூக்கி எறியப்பட்டதோ. ஏன் இன்னென்றுகூட அவனுக்குத் தெரியாதே அது என்ன? அதுதான் கலாவின் சாவு! ஆம் கார் எபபோது மரத்தில் மோதியதோ அப்போதே அவள் உயிரும் போய்விட்டது. எந்த அதிர்ச்சிச் செய்தியும் மாணிக்கத்துக்கு—சிறிதும் எட்டக்கூடாது என்று டாக்டர் கருதியதால் கலாவின் சாவை மறைத்து வைத்தார்.

ஒரு மாதம் ஓடிமறைந்தது மாணிக்கமும் குணம் அடைந்தான், கலாவின் சாவையும் அறிந்தான், அவளை நினைத்து நினைத்து அழுதான். அழுது ஆவதென்ன? ஆனாலும் மனம் கேட்கவில்லை. கலா என்னும் குயில் அவனைச் சுற்றிவட்டமிட்டு வட்டமிட்டுப் பறந்தது. இனிய கதைகளையெல்லாம் இன்பமாகப் பாடியது, இப்போது...? எங்கோ பறந்து போய்விட்டது.

வேதலிங்கம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார் மாணிக்கம் கேட்கவில்லை. "கலா இல்லாத சொத்து சுகம் எனக்கு வேண்டாம்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான். அதைக் கண்டு ஆச்சரியப்பட்டார் வேதலிங்கம். கூலிக்காரப்பயல்கள் எல்லாம் பணத்துக்கு ஆசைப்பட்டுத்தான் பணக்கார வீட்டில் கல்யாணம் செய்யப் பார்க்கிறார்கள் என்று நினைத்திருந்தாரல்லவா அவர். அதனால்தான் ரொம்ப ரொம்ப ஆச்சரியப்படுகிறார். மாணிக்கத்தின் மனதில் என்ன இருந்தது என்பது இப்போதுதான் அவருக்குப் புரிகிறது. பணத்துக்காக அவன் கலாவை விரும்பவில்லை—அந்தப் பணத்துக்கும் மேலாக அவளை எண்ணி இருக்கிறான். அவனுடைய உள்ளத்தின் உள்ளே இப்போது வேதலிங்கம் நுழைந்து பார்க்க முடிந்தது.

ஒன்றை இழந்துதான் அதன் சிறப்பை அறியவேண்டிய சூழ்நிலை—வாழ்க்கையின் சில கட்டங்கள் உண்டாக்குமோ—இப்போது அதே மினர்வா ஜவுளி ஹாலில் துணிக் கிழித்துக் கொண்டிருக்கிறான் மாணிக்கம்;

With the best compliments from:

Ayyappan Industries

TIRUPUR.

தேசியகீதம்—ஒரு பிரச்னை?

அன்புள்ள நண்பா!

இந்தியத் துணைக்கண்டம் இன்று எத்தனை எத்தனையோ பிரச்னைகளுக்குப் பதில் சொல்லி—தீர்வு கண்டு, தன்னை வாழ வைத்துக்கொள்ள வேண்டிய கட்டாயச் சூழ்நிலையில் சிக்கித் திணறிக் கொண்டிருக்கிறது.

1. 1970-71ல் பிரிட்டன், தன் படைகள் எங்கெங்கே நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றனவோ அங்கிருந்தெல்லாம் படிப்படியாகத் திரும்பப் பெற்றுக்கொள்ள உத்தேசித்திருக்கிறது.
2. இதைப்போலவே அமெரிக்காவும்கூட தன் படைகளை திரும்பப்பெற்றுக்கொள்ளாது என்று நம்புவதற்கு இடமேதுமில்லை.
3. இதேவேளையில் சீன ஏகாதிபத்தியம் தன் வலிய இரும்புக்கரங்களை இயன்ற மட்டும்-ஏன், இயலவில்லையானல்கூட—நீட்டிப்பார்க்கவும், வாலை ஆட்டிப்பார்க்கவும் செய்கின்ற முயற்சிகள் காரணமாக ஆசியாக் கண்டத்துக்கே ஒரு பேராபத்து காத்துக்கொண்டிருக்கிறது.
4. ரஷ்ய—பாக். கூட்டுறவு பலப்பட்டு அதனல் பாகிஸ்தானுக்கு, ரஷ்யா மிகுதியும் நேரடியாகவும், மறைமுகமாகவும் போராயுதங்களை கொட்டிக்கொடுத்துக் கொண்டிருக்கிறது.
5. சிங்கப்பூர், மலாயா, இந்தோனேஷியா முதலான ஆசிய நாடுகளின் மீது சீன அக்கறைகாட்டத் தொடங்கி இருப்பதானது, அந்நாடுகளை இந்தியாவுக் கெதிராக இயங்கச் செய்கின்ற பயங்கரமான நடவடிக்கையாகும்.

இவையும், இவைபோன்ற இன்னும் பல வெளிநாட்டுச் செய்திகளும் இந்தியத் துணைக்கண்டத்தின் நல்வாழ்வோடு சரியாகவோ தவருகவோ பிணையுண்டிருப்பதாகும். சில வேளைகளில் இந்தியாவின் ஆதிபத்திய உரிமைகளையேகூட அறைகூவலுக்கு அழைக்கும் விதத்தில் மாறிவிடக்கூடியதாகும்.

துணைக்கண்டத்துக்கு வெளியே நிகழ்ந்துகொண்டிருக்கும் இதுபோன்ற நிகழ்ச்சிகளின்மீது இந்திய அரசு, முழுமையான அக்கறையும் காட்டி, அதன் விளைவுகள், பலா பலன்கள் பற்றியெல்லாம் தீவிரமாக—தீர்க்கமாகச் சிந்தித்து, முடிவுகண்டு, தன் நாட்டு மக்களது வாழ்வுக்கும், தனது ஆதிபத்திய உரிமைக்கும் கேடேதும் ஏற்படாதவகையில் செயல்பட்டு காப்பாற்றித் தீரவேண்டிய நிலையில் அமர்த்திவைக்கப் பட்டிருப்பதாகும்.

நண்பா! மேலே காட்டிய சில மேலை, கீழை நாட்டு நிகழ்வுகளின்மீது இந்தியா அக்கறை காட்ட முற்படும்போது இந்திய அரசின் முழு ராஜதந்திர அறிவும் இணைந்திருந்து செயல்பட்டால்தான் — எந்தவொரு அயல் நாடும் கனல் கண்களைக் காட்டாத அளவுக்கும், நேசக் கரம் நீட்டத்தக்க விதத்திலும், அதே வேளையில் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ளவுமான நிலையினைத் தோற்றுவிக்க முடியும். அதாவது தன் முழு வலிவையும், ஆற்றலினையும் அயல்நாட்டு நிகழ்ச்சிகள் அபகரித்துக் கொள்கின்றன. (அக்கறை காட்டப்படுகிறதா இல்லையா என்பதல்ல—பிரச்னையின் தன்மை அப்படி!)

இந்த அளவுக்கு இந்தியத் துணைக்கண்டம், தன் வலிவினையும் ஆற்றலினையும் சிதறச் செய்துகொண்டிருக்கிற நிலைமையிலேயே, நண்பா, அது உள்நாட்டுக்குள்ளேயும் கவனித்துத் தீரவேண்டியதாகப் பல பிரச்னைகள் நாளுக்கு நாள் முகிழ்த்துக் கொண்டிருக்கின்றன—முளை விட்டு வளர்ந்து பூதாகாரமான வடிவத்தையும் தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றன.

1. நாட்டின் பல பகுதிகளிலும் மாநிலங்களிலும் நிலையானதொரு சட்டரீதியான ஆட்சி அமையத்தக்க விதத்தில் வழிவகை கண்டாக வேண்டும்.
2. திட்டத் தோல்விகளால் சரிந்து விழுந்த பொருளாதாரச் சரிவைத் தூக்கி நிறுத்தி மக்கள் வாழ்வு சுமையாகாதிருக்கின்ற அளவுக்குச் சரிசெய்தாகப் படவேண்டும்.
3. தொடங்கிச் செயல்பட்டு வரும் திட்டப் பணிகள் முடங்கி விடாதிருக்கும்படியாக மூலதனம் திரட்டித் தீரவேண்டும்.
4. புதிய திட்டங்கள் மூலம் வாழ்வுப் பணிகளைச் செய்யவும், வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு வழிவகை காணவும், இத்திட்டங்களுக்குவேறு மூலதனங்கள் திரட்டவும் வேண்டும்.
5. தொழில் பெருக்கத்துக்கும் முடக்கத்துக்கும் வழிவகை கண்டாகவேண்டும்.
6. தொழிலாளர் — முதலாளிகளது இணக்கமான சேவைக்கு வழி கோலியாக வேண்டும்.

விற்பனையாளர் தேவை!

"காஞ்சி" இதழை விற்பனை செய்ய, கீழ்க்கண்ட ஊர்களுக்கு விற்பனையாளர்கள் தேவை. முன் பணம் கட்டக்கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

1. சந்தைபுதுப்பாளையம்
2. சிவலார்குளம்
3. நாகர்கோயில்
4. திருச்சி
5. பெரியநாயக்கன்பாளையம்

விவரங்களுக்கு:
உரிமையாளர்.
'காஞ்சி,'
காஞ்சிபுரம்-3

7. மத்திய—மாநில அரசுகளிடையே உறவு நிலை குறித்த விவகாரத்திற்கு ஒரு தீர்வு காண்பது பற்றிய விதத்தில் சிந்தனை செய்யவேண்டும்.

8. அரசில் சட்ட வரைவுகள் பற்றி மறு ஆய்வு செய்தாகப்பட வேண்டும்.

9. கவர்னர்களது வேலைமுறை — அதிகாரமுறை — நடைமுறை பற்றிய நீக்குப்போக்கான நிலையை அகற்றி ஒரு ஸ்திரமான வழியைக் காட்டக்கூடிய கட்டத்துக்கு அறிவு தேடல்.

10. பல மாநிலங்களிலும் பரவலாக நிலவிக்கொண்டிருக்கிற வரட்சி நிலைப் போக்க, மாநில அரசுகளுக்குத் தக்க விதத்தில் கைகொடுத்தல்—உதவுதல்.

11. சாதிசமயப் பிணக்குகளை ஒழித்தல் — சாத்திரக் கேடுகளை அகற்றல்.

12. இந்தியத் துணைக்கண்டத்தில் தொழில் வளத்தைப் பெருக்கி இறக்குமதி இனங்களைக் குறைத்து —போதிய அளவு ஏற்றுமதி மிகுத்துக் காட்டத் தக்க நடைமுறைகளை உண்டாக்குதல்.

13. பொதுமக்கள் தலையில் சுமையாக விழாத அளவுக்கு ஏற்றுமதிகளை மிகுத்துக் காட்டுவதன் மூலம் உள்நாட்டு உற்பத்திகள் விலையேற்றம் பெருதிருக்கத்தக்கவாறு கண்காணித்து ஆவன செய்தல்.

இவையும் இவைபோன்ற இன்னும் பலவும் பூதாகாரமான வடிவத்தில் எழுந்துநின்று நாட்டின் ஜனநாயகக் கோட்பாட்டுக்கே உலைவைத்துக்கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் தீர்த்து. தீர்வுகண்டு ஒரு ஒழுங்கு முறையை நிலைநாட்ட வேண்டிய அவசரமான நிலைமையும் ஏற்பட்டுவிட்டிருக்கிறது.

ஆக, உள்நாடும் வெளிநாடும் இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள ஒரு அரசின் ராஜதந்திர அறிவை அறைகூவி அழைத்துக் கொண்டே கேலிச் சிரிப்பும் சிரித்து இகழ்ச்சி பேசி என்ன செய்யப் போகிருய்? என்ற வினவையும் தொடுத்துவிட்டு எட்ட நின்று கொண்டிருக்கின்றன!

ஆனல் நண்பா, பிரிட்டிஷ் அரசோ, அமெரிக்க அரசோ தன் படைகளை வாபஸ் பெறுவதனல் ஏற்படுகின்ற கடலாதிக்கப் பிரச்னை எந்த அளவுக்கு இருக்கும் என்பது பற்றியோ, ஆசிய நாடுகளோடு சீனக்குலாவல் இந்திய ஆதிபத்தியத்துக்கு எந்த அளவு கேட்டையுண்டாக்கும் என்பது பற்றியோ இந்திய அரசு அக்கறை கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. அறிவு பெற்றிருப்பதாகவும் புரியவில்லை. ஆனல்—

1. வெளிநாடுகளில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் தூதுவர் அலுவலகங்களில் இந்தியை நுழைக்க வேண்டும்;

2. சிறுபான்மை மொழியான இந்திக்கு எந்தெந்த ஏற்றம் தரலாம்

3. எதிர்கட்சிகள் ஆட்சியிலிருக்கின்ற மாநிலங்களது மக்களை மனம்மாற்றம் பெறச்செய்யும் விதத்திலே என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கலாம்?

4. அமைச்சர்கள் மீதும், காங்கிரசுக்காரர்கள் மீதும் குறை, பழிகூறுவதைத்தடுக்க எந்த வகையிலே சட்டமியற்றலாம்?

5. காங்கிரசை ஸ்திரப்படுத்த யாரோடு இணையலாம்? யாரை அழிக்கலாம்?

6. யாரை யாரோடு மோதவிடலாம்? யார், யாரோடு மோதுவதால் என்ன ஏற்படும்? அது காங்கிரசுக்கு எந்த வகையில் பயன்படும்?

என்ற வகையில் சிந்தனையைச் செலுத்திக்கொண்டிருக்கிறது, நாளும், நாளும்!! நண்பா, முன்னதாக எடுத்துக் காட்டிய அயல்நாட்டு, உள்நாட்டு விவகாரங்களைத் தீர்க்கவே நேரமிராது என்கின்ற தன்மையிலுள்ள ஒரு அரசுக்கு, இந்த அன்ருட நடைமுறைகளைப்பற்றி மட்டும் ஏன், எதனல், எப்படிச் சிந்திக்க நேரமிருக்கிறது? முடிகிறது?

ஒன்று எந்த ஒன்றைப்பற்றியும் அக்கறையற்றிருக்கவேண்டும்; அல்லது ஆற்றல் இல்லாமலிருக்கவேண்டும்.

அல்லது, அவையெல்லாம் முக்கியத்துவம் வாய்ந்தவையல்ல; காங்கிரசுக்குப்பலம் தேடுவது தான் தலையாய தேவை—அவசரமாகத் தேவை என்று முடிவுக்கு வந்து செயல் பட்டுக்கொண்டிருக்கவேண்டும்.

மத்திய அரசின் முன் உள்ள தலையாயபிரச்னைகளையெல்லாம் நாட்டு மக்கள் எங்கே கவனித்துவிடப் போகிருர்களோ என்ற அச்சம் குடைந்தாட்ட, அவற்றையெல்லாம் மூடி மறைத்துவிட்டு தொழுநோய் மேனியை புனுகிட்டு மறைத்தல்போல, காங்கிரசாட்சியின்—மத்திய அரசின் பெரிய குறைகளையும் கடமைகளையும் மூடி மறைத்து அற்பவிஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, முதன்மையாக்கி விளம்பரப்படுத்த முன்வந்து விடுகின்றன, தமிழ் நாட்டிலுள்ள சில காங்கிரஸ் ஏடுகள்!

தொட்டுக்காட்ட வேண்டுவன
தட்டிக்கேட்க வேண்டுவன
இடித்துரைக்க வேண்டுவன
எடுத்துக்காட்ட வேண்டுவன

என்று எவ்வளவோ இருந்தும், அவை மிகச்சாமர்த்தியமாக மூடிவைக்கப்படுகின்றன! அதேவேளையில் சிந்தனைகளும் கலைக்கப்படுகின்றன.

முகப்பில்: காஞ்சிபுரம் நகரமன்றத் தலைவர்
திரு. கே. டி எஸ். மணி அவர்கள்

தலையாய பிரச்னைகள் என்று ஆயிரமாயிரம் இருக்கிறபோது—மொழி வெறி பிடித்து மத்திய அரசு அலைவானேன்?

என்று எந்த காங்கிரஸ் ஏடாவது இதுவரையில் கேட்டதுண்டா?

பலமான பாதுகாப்பு, எல்லைப் பகுதியில் இருக்கிறது என்கிறீர்களே—ஏனையா மீண்டும் மீண்டும் ஊடுருவல் செய்திகள் வந்துகொண்டே இருக்கின்றன?

என்று ஒரேயொரு முறையாவது கேட்டுவைப்போமே என்று எந்த காங்கிரஸ் ஏடாவது முனைந்ததுண்டா?

ஜனநாயகம், ஜனநாயகம் என்று பேசிக் கொண்டே வருகிறீர்களே, கட்சிதாவல் போன்ற இழிவுச்செயல்களுக்கு ஊக்கம் தந்து உற்சாகப் படுத்தியது காங்கிரஸ்தானே; இனியும் அந்த வழியில் செல்லாதிருக்க காங்கிரஸ் ஏன் முனைய வில்லை. அதுபற்றிப் பேசவில்லை?

என்று ஊர் மக்களது கண்களைக் கட்டி விடுவதற்காக வாவது ஒரு வினா தொடுத்து வைத்ததுண்டா?

இல்லை நண்பா! இதுபற்றி யெல்லாம் கேட்டு, இடிப்பாரை இல்லா ஏமரா மன்னனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று அது நினைக்கவில்லை. மாறாக—

எந்தக் கழக ஏட்டில் எந்த வொருவரைப் பற்றி என்ன செய்தி வருகிறது—

அந்தச் செய்தியினை எந்தெந்த இடத்தில் எப்படி யெப்படித் திரித்து வெளியிட்டு பிரச்னை களை உண்டாக்கி வைக்கலாம்!

என்ற விதத்திலே செயல்படுகின்றன! சேற்றையும் வாரிப் பூசிக்கொள்கின்றன.

உனக்குத்தான் தெரியுமே நண்பா! திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், இந்தித் திணிப்புக்கும் இடையே நெடும்பகை—தீராப்பகை 1938 முதலே இருந்து வருகிறதென்று!

இந்தி எதிர்ப்பிலே கழகத்தின் ஈடுபாடு பற்றி மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் வெளிப்படுத்திக் காட்டியிருக்கிற விளக்கங்களைவிட இன்னொருவர் விளக்க மளித்துவிட முடியுமா?

இந்தித் திணிப்பு—அது எந்த எந்த வடிவத்தில் இருந்தாலும் அது அத்துணை அவசரமானதா? முறையான செயலா?

என்று எந்தக் காங்கிரஸ் ஏடும் கேட்கவில்லை—கேட்க நினைக்கக் கூடவில்லை. அதில்,

தேசிய கீதம் இந்தியிலிருந்தால் கழகம் அதனை அவமதிக்கும்,

என்று கட்டம் கட்டிச் செய்தி வெளியிட மட்டும் துடிக்கிறது—துடியாய்த் துடிக்கிறது. எல்லாம் எஜமான விசுவாசம்! பெறுகின்ற கூலிக்கு வேலை!!

விஷயம் இதுதான்:
கழகக் கலைஞரின் ஏடு முரசொலி,

அதிலே ஒரு செய்தி விளக்கம் வந்திருக்கிறதாம். அதாவது—

"தேசியகீதத்தைத் தி. மு. க. ஒருநாளும் அவமதிக்காது. ஏனெனில் அது வங்க மொழியில் பாடப்படுகிறது"

என்பதாக!

இதிலே என்ன தவறு காண உன்னால் முடிகிறது நண்பா!

தேசியகீதத்தை இயற்றித்தந்தவர், அது ஒரு காலத்தில் தேசியகீதம் என்று மதிக்கப்படும் என்று இயற்றினார்? இல்லையே! தாகூர் இயற்றி வைத்திருந்த பல பாடல்களிலிருந்து தேர்ந்தெடுத்துக்கொண்டார்கள் மத்திய அரசினர்! தாகூர் வங்காளி. அதனால் அது வங்க மொழியில் இயற்றப்பட்டிருந்தது.

ஆனால் நண்பா, மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி கருத்தறிவித்த போது எந்த உணர்ச்சியினைப் பிரதிபலித்துக் காட்டியது?

ஒவ்வொரு மாநிலமும், அது அந்தந்த மொழிகளைப் பேசும் மக்களுடையதாகவிருக்க வேண்டும்

என்றல்லவா எடுத்துக்காட்டப்பட்டது! அது அந்தந்த மொழி மாநில மக்களது இதயத்தை நீவிவிடத்தக்க பேச்சு—கருத்தல்லவா!

தேசிய கீதம் வங்க மொழியில் எழுதப்பட்டிருந்ததனை எடுத்து, அதற்கு இந்தி மொழி பெயர்ப்புச் செய்து—அதனைத்தான் வங்கம் தேசிய கீதமாக இசைக்கவேண்டும் என்று மத்திய அரசு ஒரு கட்டளை பிறப்பிக்கட்டுமே பார்க்கலாம்!

இந்தி தேசிய கீதத்தைதான் வேறு மாநிலங்கள் இசைக்கவேண்டும் என்று நாடாளுமன்றத்திலே ஒரு சட்டமே இயற்றட்டுமே பார்க்கலாம்!

நண்பா! தேசிய கீதம் மதிக்கப்பட வேண்டும் என்பதிலே கருத்து வேற்றுமை இல்லை. நாட்டு மக்கள் அத்தனைப் பேருடைய கடமையும் அது,

---

பொருளாதாரப் பாடம்!

"உரத்தின் மீது போடுகின்ற வரி உணவு உற்பத்தியின் மீது – உணவு விலையின்மீது போடுகின்ற வரியாகும்.

"உரத்தைப் பயன்படுத்தியும் வேறு காரணங்களால் விளைச்சல் குறைவதுமுண்டு; அப்பொழுது உரத்தின் மீது போடுகின்ற வரியை வேறு வகையில் ஈடுசெய்ய முடியாது.

"உரத்தின்மீது வரி போட்டால், அது உணவுப் பண்டங்களின் விலையை அதிகரிக்கச் செய்யும்.

"இந்தியாவில் சாதாரண மக்களாக உள்ளவர்களின் செலவுக் கணக்கைப் பார்த்தால், 100-க்கு 60 பங்கு உணவுக்காகப் போகிறது; எனவே, உணவு விலை எல்லோரையும் பாதிக்கும் — எல்லோருடைய செலவுகளும் கூடுதலாகும்; பிறகு மற்ற பொருள்களும் விலை கூடுதலாகும்; இது பொருளாதாரப் பாடத்தின் முக்கிய நினைவுறுத்தலாகும்."

—இரா. செழியன், நாடாளுமன்றத்தில்

ஆனால் அந்த கீதத்துக்கு ஒரு மொழி முக்கியத்துவம் கொடுத்து, அதனைத்தான் இசைக்க வேண்டுமென்றால்—

அது ஜனநாயகமுமல்ல — நாட்டுணர்ச்சியின்பாற்பட்ட செயலுமல்ல! ராஜதந்திரப் போக்குமல்ல!

இந்தியத் துணைக்கண்டத்தில் ஏற்கெனவே இந்தி மொழிக்குப் பரவலான எதிர்ப்பு ஏற்பட்டிருக்கும்போது —தேசீய கீதத்தையும் இந்தி மொழியில் பாடவேண்டுமென்று கூறப்படுவதனை எதிர்ப்பதாகக் கூறினால், அது நாட்டுப் பற்றுள்ள செயலாகாதாம்! நாட்டுப் பற்று என்றால் என்ன என்பதற்குப் பாடம் நடத்தவருகிறது ஒரு காங்கிரஸ் ஏடு!

காங்கிரசுக் கட்சியின் எல்லா சர்வாதிகார நடைமுறைகளையும், எந்த எதிர்ப்புக் குரலும் எழுப்பாது அப்படியே ஏற்றுக்கொண்டு, தண்டனிட்டுத் தொழுவதுதான் நாட்டுப் பற்று என்று காங்கிரசுக் கட்சி கருதுமானால், அது அப்பட்டமானதொரு சர்வாதிகாரப் போக்காகத்தான் இருக்க முடியும்,

நாட்டுப் பற்று என்பதனை விலை கொடுத்து வாங்க முடியாது; கேட்டுப் பெறவும் முடியாது, உதிரத்தோடு ஊறி வளர்ந்து கலந்து நிற்பதாகும் அது.

எந்த நாட்டில் எவன் பிறந்தாலும் அந்த நாட்டின் மீது அவன் கொண்டுள்ள பற்றினை எடுத்துக் காட்ட இன்னொருவர் விதிக்கின்ற நிபந்தனைக்கு ஆளாக முடியுமா? சரியான நடைமுறையா?

இந்திய மக்கள் என்று மத்திய அரசின் புள்ளி விவர இலாகா எடுத்துக் காட்டுகிற 53 கோடிப் பேர்களும், காங்கிரஸ் கட்சி, இவை இவைதான் நாட்டுப் பற்றை வெளிப்படுத்திக் காட்டும் நடைமுறைகள் என்று வகுத்துத் தருவதனை ஏற்றுச் செயல்பட வேண்டும என்று நினைத்தால் அது ஜனநாயக மரபாக விருக்க முடியாது. சர்வாதிகாரப் போக்கு என்றே அதனை மதிக்க முடியும்.

எனவே நண்பா, நாடு என்றால் என்ன? மக்கள் என்றால் யார்? நாட்டுப் பற்று என்றால் என்ன பொருள்? என்பதனைக் கற்றுக்கொள்ள வேண்டிய நிலையிலேயேயிருக்கின்ற காங்கிரசுக் கட்சி, மாற்றாருக்கு நாட்டுப் பற்றைப் பற்றிப் போதிக்க முன்வருவதுதான் சிரிப்பாகவிருக்கிறது!

ஒரு சிறுபான்மை இனத்தின் மொழியான இந்தியை இந்தியத் துணைக் கண்டத்து மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது எந்த வகையில் நாட்டுப் பற்று என்பதற்கு காங்கிரசுக் கட்சியும், அதற்கு வக்காலத்து வாங்கும் ஏடுகளும்தான் பதில் சொல்லியாக வேண்டும்.

அதனை விடுத்துவிட்டு, தேசிய கீதம் என்பதன் பேராலும்கூட இந்திக்கு ஏற்றம்தேட முனைவது, பச்சை சர்வாதிகாரமும, இனவெறியும் கொண்ட செயலாகத்தான் அது இருக்க முடியும.

நண்பா, இந்திதான் இணைப்பு மொழி, தேசிய மொழியென்று வகுக்க முன்வராமல், அதுவும் ஒரு வட்டார மொழியென்ற அளவில் இருந்து அந்த நிலையில் இந்தியில் தேசிய மொழி இருககுமானால், அப்போது நிச்சயம் அந்த இந்திப் பாடலுக்கு எதிர்ப்பு இராது.

அதனை விட்டு விட்டு இந்தியை நீ உன் மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எடுத்துக் கூறிக்கொண்டிருக்கிற வேளையிலேயே இந்தி தேசீய கீதத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றால் அது ஒரு தலைப்பட்ட தீர்ப்பாகத்தான் இருக்க முடியும்.

தேசீய கீதத்துக்கு இதுவரையில் எந்தவொரு எதிர்ப்பும் எந்த மாநிலத்திலிருந்தும் வராமலிருப்பதற்குக் காரணமே அது இந்தியில் இல்லாமலிருப்பதுதான்!

"வேறு மொழியில் தேசீயகீதம் இருந்தால் அதனை அவமதிப்போம்" என்பது கழகக் கருத்தா? என்று கேட்கின்ற கேள்வியிலே இருக்கிறது, வேறுமொழியென்றால் இந்தியென்று.

தேசீயக் கொடியே—அது காங்கிரஸ் கட்சியின் சின்னம்போல் இருக்கிறதனால், அது மாற்றப்பட வேண்டும்.

என்று நாடாளுமன்றத்திலேயே கேட்கப்படுகிறபோது—

தேசீயகீதம் இந்தியில் இருக்குமானால் அதுவும் மாற்றம் கோரவேண்டிய ஒன்றுதான!

என்பதிலே என்ன தவறிருக்க முடியும்!

இந்தி ஒன்றுதான் தேசீயமொழி, நாட்டின் பொது மொழி — என்று எதிர்ப்பற்ற முறையில் செயலுருவம் பெற்று விட்டதா?

அப்படிக் கூறிக்கொண்டிருக்கும் அரசியல் சட்ட விதியே மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை எழும்போது அந்த கோரிக்கையிலேயே எதிர்ப்புக் காணப்படவில்லையா?

ஆகவே நண்பா, நம் காங்கிரஸ் இதழ்களுக்கு நாட்டின் முக்கிய பிரச்னைகள் கண்ணுக்குத் தெரிவதைவிட, தூசும், துரும்பும் பெரியதாகத் தெரிகிறதே! என்ன செய்வது? யார் கேட்பது!

பழக்க வாசனை அப்படி! நாம் தேசீயகீதம், ஒரு இனத்தவரின் மொழியில்–பொதுத்தன்மையிலே இருக்கிறது என்பதற்காக மதிப்போம்! இசைபபோம்! தலை வணங்குவோம்!

அன்புள்ள,

திருவாரூர் முத்துராமன்

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.